**சிறப்பு நீதிமன்றம் எண்.2 (LAOP), ஜெயங்கொண்டம்.**
**முன்னிலை: திரு.V.பிரேம்குமார்., B.A., B.L.,**
**சிறப்பு நீதிபதி எண்.2 (LAOP),**
**2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**அசல் வழக்கு எண்.258/2020**
**(C.N.R.No.TNAL 06-000938-2020)**
**(ஜெயங்கொண்டம், சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.217/2019)**

கலியபெருமாள் ... வாதி

...எதிர்...

1. சிங்காரவேல்
2. பன்னீர்செல்வம்
3. பிரசாத்குமார்
4. கோவிந்தசாமி
உதவி ஆய்வாளர்
**5. மல்லிகா** ... பிரதிவாதிகள்
**( D5 implead and Amended as per IA.04/2021 in order dated.28.10.2021)**

இந்த அசல் வழக்கானது முதன் முதலில் ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.217/2019 ஆக கடந்த 16.12.2019 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் மாண்புமிகு அரியலூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களின் A.No.142/2019, நாள் 18.11.2019ன் உத்தரவுபடி ஜெயங்கொண்டம் சிறப்பு நீதிமன்ற எண்.2 ற்கு இந்த வழக்கு மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.258/2020 ஆக கடந்த 19.06.2020 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 03.08.2026 அன்று

விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.K.R.சிவம் மற்றும் திரு.P.P.மனோகரன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், 4ம் பிரதிவாதி கடந்த 04.01.2021 அன்று ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்டும், இருதரப்பினர் வாதங்கள் கேட்கப்பட்டு, சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

தாவா சொத்து வாதிக்கு உரிமையானது என்று விளம்புகை செய்யக் கோரியும், தாவா சொத்தில் வாதிக்குண்டான அமைதியான அனுபோகத்தினை பிரதிவாதிகளோ, அவர்தம் முகவர்களோ இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கக் கோரியும், தாவா சொத்துக்களை பொருத்து 1ம் பிரதிவாதி குடும்பத்தில் ஏற்பட்ட 18.05.2012 ம் தேதியிட்ட பாக பத்திரமும், 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு 06.11.2013 அன்று எழுதிக்கொடுத்த கிரைய பத்திரமும் இல்லா நிலையது என்று விளம்புகை செய்யக்கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## எதிர்கோருரிமை (Counter Claim)

எதிரிடை கோரிக்கை சொத்து 3ம் பிரதிவாதிக்கு உரிமையானது என்று விளம்புகை செய்யக் கோரியும், அதன் தொடர் பரிகாரமாக எதிரிடை கோரிக்கை சொத்தினை 3ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருவதை வாதியோ, அவரின் வாரிசுகளோ அல்லது அவர்தம் முகவர்களோ இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க கோரியும், இந்த எதிரிடைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வழக்குரை மற்றும் பதிலுரையின் சுருக்கம்:-**

(i) தாவா சொத்து வாதிக்கு பூர்வீகமாகவும், வாதியின் பெரியதந்தையால் கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்களாகும். தாவா சொத்து நத்தம் பகுதியை சேர்ந்ததாகும். தாவா சொத்தில் ஒரு பகுதியினை வாதியின் பெரியதந்தை முத்துக்குமாரசாமி பத்தர், துரைசாமி பத்தர் மனைவி செல்லமுத்தம்மாள் வகையறாவிடமிருந்து, 26.12.1924 ல் கிரயம் பெற்ற பத்திரத்தின் சான்றிட்ட நகல் இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தில் கண்ட சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்தும் வாதியின் தாத்தா சங்கர் பத்தர் வாய்மொழியாக அதற்கு முன்பே செல்லத்தம்மாள் வகையறாவிடம் கிரயம் பெற்ற சொத்தாகும். அதனை மேற்படி 20-12-1924 தேதிய கிரயப்பத்திரத்திலேயே நான்கெல்லையில் குறியிடப்பட்டுள்ளது. மேற்படி தாவா

சொத்துக்களை முத்துகுமாரசாமி குடும்பத்திற்கு மூத்தவர் என்ற முறையில் அனுபவித்து வந்து அவருடன் பாகம் பிரியாமல், அவருடைய சகோதரர்களான கோவிந்தசாமி, சுப்பையன் ஆகியோர்கள் கூட்டாக அனுபவித்து வந்து ஒரு பகுதியில் வடபுறத்தில், வீடு கட்டியும் தென்புறத்தில் கூரை கொட்டகை போட்டும் அனுபவம் செய்துவந்தார்கள். மேற்படி முத்துக்குமாரசாமிக்கும், கோவிந்தசாமிக்கும் வாரிசு ஏதுமில்லாமல் இறந்துவிட்டார்கள். அவர்களுடைய மனைவிகளும் இறந்துவிட்டார்கள். சுப்பையனுக்கு வாதி மட்டுமே வாரிசாகும். அதனடிப்படையில் வாதி தாவா சொத்துக்களை வாரிசுபடி அடைந்து அனுபவம் செய்துவருகிறார். தாவா சொத்துக்களுக்கு பழைய நத்தம் சர்வே எண் 347 / 10A, மற்றும் 347/9 லும் கட்டுப்பட்டது தாவா சொத்தினை பொறுத்து வாதியோ, வாதியின் முன்னோர்களோ எவ்வித வில்லங்கமும் யாருக்கும் செய்யவில்லை. அது பொருத்து 01-01-1920 ல் இருந்து வில்லங்க சான்றிதழ் இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துகளுக்கு தற்போதைய புதிய நத்தம் சர்வே எண் 584/9, 584 / 10 ஆகும். தாவா சொத்துக்களில் வடபுரம் 584 /9ல் தற்போது இடிந்த நிலையில் உள்ள வீடும் 584 / 10 தோட்டம் ஆகவும் உள்ளது. இந்நிலையில் 1 முதல் 3 பிரவாதிகள் கடந்த 12-11-2019 அன்று தாவா சொத்துக்களில் உள்ள இடிந்த வீட்டில் சாமான்களை போட்டு வைத்திருந்த ரூமை திறக்கும்படி

காலி செய்து தரும்படியும், ஆண்டிமடம் காவல் நிலையத்தில் தாவா சொத்துக்களை அளந்து கொடுக்க சொல்லியும் புகார் கொடுத்ததில், அப்போது இருந்த நடேசன் காவல் உதவி ஆய்வாளர் இருதரப்பினரையும் கூப்பிட்டு விசாரித்து, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு உரிமை இருந்தால், நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்து சுவாதினம் பெற்றுக்கொள்ளசொல்லி எழுதிவாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டார்கள்.

(ii) அவ்வாறுள்ள நிலையில் வாதியும் மேற்படி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்குரிய 18-05-2012 தேதிய பாக அட்டவணை மற்றும் 06-11-2013 தேதிய கிரய பத்திரத்தின் நகலை வாங்கி பார்த்தபோது, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்குள் ஆதரவு ஜோடித்தது பொருத்து வாதிக்கு தெரியவந்தது. அவ்வாறு 1 முதல் 3 பிரதிவாதிகளுக்குள் ஆதரவு ஏற்படுத்த, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு உரிமையில்லை. அவ்வாறு ஏற்படுத்தப்பட்டுள்ள ஆதரவுகளில் வாதி பார்ட்டியாக இல்லாததால் மேற்படி ஆதரவுகளை செல்லாது என விளம்புகை செய்ய வேண்டியுள்ளது. தாவா சொத்துக்களில் மீண்டும் கடந்த 27-11-2019 -அன்று 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை வாதி அனுமதியில்லாமல், அடியாட்களை வைத்துக்கொண்டு அளக்கவும், தாவா சொத்துக்களை ஆக்கிரமிக்கவும் முயற்சித்ததை பொறுத்து ஆண்டிமடம் காவல் நிலையத்தில் 28-11-2018 அன்று வாதி புகார்

கொடுத்தபோது 4ம் பிரதிவாதி, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சாதகமாக செயல்பட்டு, தனது அதிகார பலத்தை பயன்படுத்தி 1 முதல் 3 பிரதிவாதிகள் சொத்துக்களை 3 –ம் பிரதிவாதி வசம் விட்டுக்கொடுக்கச்சொல்லி மிரட்டி வருகிறார். அதனால் அவரையும் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. அவர் பேரில் அரியலூர் காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது பிரதிவாதிகள் செயலை சமூக உத்தரவினால் மட்டுமே நிரந்தரமாக தடுத்து நிறுத்த முடியும் என்பதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிரிடைக்கோரிக்கையை முற்றிலும் மறுத்து பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>1 முதல் 3 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் 3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிரிடைக்கோரிக்கையின் சுருக்கம்</u>

(i) வாதி தன் வழக்குரையில் தாவா சொத்துக்கள் அவருக்கு பூர்வீகமாகவும் அவரின் பெரியதந்தை முத்துகுமரசாமி பத்தரால் கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்று கூறும் வாதி அவரின் பிராதுரையிலோ அல்லது சொத்து விபரத்திலோ எந்த இடத்திலும் தாவா சொத்தில் எப்பகுதி அவரின் பெரியதந்தை முத்துக்குமரசாமி

கிரயம் வாங்கிய இடம், எப்பகுதி அவரின் பூர்வீக இடம் என்று குறிப்பிட்டு தெளிவாக கூறவில்லை. வாதி வேண்டுமென்றே மிகவும் சூசகமாக அவ்வாறு பிரித்து கூறாமல் விட்டுள்ளார். தாவா சொத்துக்களை வாதியின் பெரியதந்தை முத்துகுமரசாமி பத்தர் 26.12.1924 ந் தேதியில் கிரயம் வாங்கி அனுபவித்து வந்த நிலையில் அவரே மேற்படி சொத்தினை 15.08.1929 ந் தேதி ஏற்பட்ட கிரயப்படி வேலாயுத பத்தர் என்பவருக்கு கிரயம் கொடுத்து விட்டார். வாதியின் பெரியதந்தை முத்துகுமரசாமி பத்தரிடமிருந்து 15.08.1929 தேதிய கிரயப்பத்திரப்படி கிரயம் பெற்ற வேலாயுத பத்தர் அதே தேதியிலேயே மேற்படி கிரயச் சொத்தினையும் கீழ்புறமுள்ள கீழ் மேல் 8½x58 விஸ்தீரணமுள்ள சொத்தினையும் பரமசிவ பத்தர் மற்றும் செல்லம்மாள் வகையறாவிடமிருந்து கிரயம் வாங்கி அனுபவித்து வந்தார். பின்பு மேற்படி இரு கிரய சொத்துகளையும் 17.10.1929ந் தேதிய கிரயப் பத்திரப்படி சுப்ரமணிய செட்டியார் என்பவருக்கும் கிரயம் கொடுத்து அவர் அனுபவித்து வந்தார். அவர் காலதிசைக்கு பின்பு அவரின் வாரிசான அவர் மனைவி ராஜாம்மாள் வகையறா அனுபவித்து வந்த நிலையில் மேற்படி ராஜாம்மாள் அவருக்காகவும் அவரின் மைனர் மகன் பழனிசாமிக்கு கார்டியனாகவும் இருந்து 18.02.1936ந் தேதி ஏற்பட்ட கிரயப்பத்திரத்தின் படி சின்னசாமி செட்டியாருக்கு கிரயம் கொடுத்து விட்டார்கள். அதன்படி மேற்படி சொத்துக்களை சின்னசாமி செட்டியார் அனுபவித்து வந்து அவர்

காலமான பின்பு அவரின் ஒரே வாரிசான அவர் மனைவி தையல்நாயகி அனுபவித்துவந்த நிலையில் நல்ல எண்ணத்துடனும், மனபூர்வமாகவும் பிறர் கட்டாயமின்றியும் அவர் 17.04.1967ந் தேதி எழுதி வைத்த ரிஜிஸ்டர் உயில் படி கோவிந்தசாமி செட்டியார் என்பவருக்கு மேற்படி உயில் F ஷெட்யூலில் கண்ட விபரப்படி மேற்படி சொத்தினை பாத்தியபடுத்தி கொடுத்து அனுபவிக்கச் சொல்லிவிட்டார்.

(ii) மேற்சொன்ன உயில் மூலம் மேற்சொன்ன சொத்துக்களை பெற்ற கோவிந்தசாமி செட்டியார் அவர் ஆயுள்பரியந்தம் மேற்படி சொத்துக்களை அனுபவித்து வந்து அவர் ஆயுளுக்கு பின்பு அவரின் வாரிசுகளான அவரின் மகன்கள் கோதண்டபாணியும், சிங்காரவேலுவும் அடைந்து அனுபவித்து வந்த நிலையில் மேற்படி சொத்துக்களை பொறுத்து 18.05.2012ந் தேதி ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பாக பத்திரத்தில் கண்டுள்ள விபரப்படி தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ள மேற்படி சொத்தானது சிங்காரவேல் பாகத்திற்கு B ஷெட்யூலில் ஒதுக்கப்பட்டு அவர் அவரின் முன் பாக்கியஸ்தர்களை போன்றே தொடர்ந்து எப்பொழுதும் போல் அனுபவித்து வந்தார். அவரின் பெயரில் சர்வே எண் 584/9க்குரிய பட்டா எண் 574ம் 00100 ச.மீ. விஸ்தீரணத்திற்கும் சர்வே எண் 584/10க்குரிய பகுதி 00093 ச.மீ. விஸ்தீரணத்திற்கும் சர்கார் புறம்போக்கு என்று

வகைபாடு தவறுதலாக செய்யப்பட்டு பின்னிட்டு அடியில் கண்ட விபரப்படி 3ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா எண் 574 ம் சர்வே எண் 584/10 க் குரிய மனை பட்டா 00073 ச.மீ. விஸ்தீரணத்திற்கும் 3ம் பிரதிவாதி மனைவி மல்லிகா பெயருக்கு ஏற்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்களை 3ம் பிரதிவாதிக்கு சரியான பிரதி பிரயோஜனத்திற்கு கடந்த 06.11.2013ந் தேதி பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரப்படி கிரயம் கொடுத்துவிட்டார். மேற்படி கிரயத் தேதி முதல் தாவா சொத்தானது 3ம் பிரதிவாதியின் உரிமையிலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது. தாவா சொத்தில் இருந்து வரும் வீடு பழுதாகி இடிந்து வரும் நிலையில் குடியிருப்பு பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லாத நிலையில் மேற்படி வீட்டினை பூட்டிட்டு பின்னிட்டு, அதனை இடித்து விட்டு புதிய வீடு கட்டி கொள்ளலாம் என்ற எண்ணத்தில் 3 பிரதிவாதி இருந்து வந்தார். இப்பிரதிவாதிகள் வேறு தெருவில் குடியிருந்து வந்ததை பயன்படுத்தி தாவா வீட்டிற்கு கீழ்புறம் குடியிருந்து வரும் வாதி இடிந்த நிலையில் உள்ள தாவா வீட்டின் கீழ்புற சுவற்றை இடித்து விட்டு அப்பகுதியில் அவரின் கால் நடைகளை கட்டிக்கொண்டும் அதனை இப்பிரதிவாதிகள் அவிழ்த்து ஒட்டி விடுவதுமாகவும் நிலைமை இருந்து வருகிறது. மேலும் சரிந்து விழும் வீட்டு கூரை மரச்சட்டங்கள் போன்றவற்றை தாவா வீட்டில் போட்டும் தெரு கதவில் உள்புறமாக மரச்சாமான்கள் போட்டும் கதவை திறக்க முடியாமல் கடந்த 8 மாதங்களுக்கு முன்பு

செய்துவிட்ட விபரம் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் புதிய வீடு கட்ட சென்றபோது தெரியவந்தது என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில், இவ்வழக்கில் கடந்த 20.01.2021 ம் தேதி கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.**

| | |
|---|---|
| **1.** | **Whether plaintiff is entitled for declaring the absolute owner of the suit property as prayed for?** |
| **2.** | **Whether the plaintiff is entitled for granting permanent injunction against defendants as prayed for?** |
| **3.** | **Whether the plaintiff is entitled for declaring the partition deed dated 18.05.2012 between the 1st defendant family and sale deed dated 06.11.2013 executed by 1st defendant in favour of 3rd defendant is null and void and not binding upon the plaintiff rights as prayed for?** |
| **4.** | **Whether the 3rd defendant is entitled for declaring absolute owner of the counter claim property as prayed for?** |
| **5.** | **Whether the 3rd defendant is entitled for granting permanent injunction in the counter claim property against plaintiff as prayed for?** |
| **6.** | **To what other relief the plaintiff is entitled to ?** |

5) வாதியின் வழக்குரை சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் வாதி தரப்பில், வாதி கலியபெருமாள் **வா.சா.1** ஆக

விசாரிக்கப்பட்டு, **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1 முதல் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில், 2ம் பிரதிவாதி பன்னீர்செல்வம் **பி.வா.சா.1** ஆகவும், **சையத் இஸ்மாயில்** என்பவர் **பி.வா.சா.2** ஆகவும் விசாரிக்கப்பட்டு, **பி.வா.சா.ஆ.1** முதல் **பி.வா.சா.ஆ.21** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

வாதி மற்றும் 1 முதல் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் எழுத்துமூல விவாதவுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6) <u>வழக்கெழுவினா 1 க்கான தீர்வு:-</u>**

(i) தாவா சொத்தும், எதிர்கோருரிமை சொத்தும் ஒரே சொத்துக்களாகும். மேற்படி சொத்தானது ஆண்டிமடம் வட்டம், விளந்தை கிராம நத்தம் புது சர்வே எண்.584/9 ல் 100 ச.மீ மற்றும் புது நத்தம் சர்வே எண்.584/10 ல் 93 ச.மீ உள்ள சொத்துகள் ஆகும். வாதி தரப்பில் தாவா சொத்துகள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் பிரதிவாதிகள் தரப்பு தாவா சொத்துகள் 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் விளம்புகை செய்யக்கோரி வழக்குரை மற்றும் எதிர்கோருரிமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) வாதி தரப்பில் தாவா சொத்தை வாதியின் பெரியதந்தை முத்துகுமாரசாமி பத்தர் கடந்த 26.12.1924ல் துரைசாமி பத்தர்

மனைவி செல்லமுத்தம்மாள் வகையறாவிடமிருந்து கிரயம் பெற்ற சொத்து என்றும், தாவா சொத்தை மேற்படி வாதியின் பெரியப்பா முத்துகுமாரசாமி பத்தர் மற்றும் அவருடைய சகோதரர் கோவிந்தசாமி மற்றும் வாதியின் தந்தை சுப்பையன் ஆகியோர்கள் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றும், முத்துகுமாரசாமி பத்தர் மற்றும் அவருடைய சகோதரர் கோவிந்தசாமி ஆகிய இருவரும் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார்கள் என்றும், மேற்படி முத்துகுமாரசாமி பத்தர் கிரயம் பெற்ற தாவா சொத்தை வாரிசு என்ற அடிப்படையில் வாதி மட்டும் அனுபவித்து வருவதாகவும் தாவா சொத்து பொறுத்து வாதியின் முன்னோர்களோ, வாதியோ வேறு யாருக்கும் வில்லங்கம் செய்து கொடுக்கவில்லை என்றும் எனவே தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யவேண்டும் என்று வாதிடப்பட்டது.

(iii) வாதி தரப்பில் வாதி வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதியின் வம்சாவழி பட்டியல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதியின் தந்தை வழி தாத்தா சங்கர் பத்தருக்கு முத்துகுமாரசாமி, கோவிந்தசாமி மற்றும் வாதியின் தந்தை சுப்பையன் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். தாவா சொத்தை மேற்படி வாதியின் பெரியதந்தை முத்துகுமாரசாமி பத்தர் கடந்த 26.12.1924 ல் துரைசாமி பத்தர் மனைவி செல்லமுத்தம்மாள்

வகையறாவிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்பதற்கு ஆதரவாக வாதியின் பெரியதந்தை முத்துகுமாரசாமி பத்தர் கடந்த 26.12.1924 கிரயம் பெற்ற பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தை வாதியின் முன்னோர்களோ, வாதியோ விற்கவில்லை என்பதற்கு ஆதரவாக வில்லங்க சான்றிதழ்கள் வா.சா.ஆ.3 மற்றும வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(iv) 1 முதல் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தை மேற்படி வாதியின் பெரியதந்தை முத்துகுமாரசாமி பத்தர் கடந்த 26.12.1924 ல் துரைசாமி பத்தர் மனைவி செல்லமுத்தம்மாள் வகையறாவிடமிருந்து கிரயம் பெற்றார் என்ற சங்கதி ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி தாவா சொத்தை கிரயம் பெற்ற முத்துகுமாரசாமி பத்தர் மேற்படி சொத்தினை கடந்த 15.08.1929 ந் தேதி வேலாயுத பத்தர் என்பவருக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றும், மேற்படி வேலாயுத பத்தர் வாதியின் பெரியதந்தை முத்துகுமரசாமி பத்தரிடமிருந்து 15.08.1929 தேதியில் கிரயம் பெற்ற சொத்தையும் அதே தேதியிலேயே மேற்படி கிரயச் சொத்திற்கு கீழ்புறமுள்ள 8½x58 விஸ்தீரணமுள்ள சொத்தினை பரமசிவ பத்தர் மற்றும் செல்லம்மாள் வகையறாவிடமிருந்து கிரயம் பெற்ற மேற்கண்ட இரண்டு சொத்துகளையும் சேர்த்து கடந்த 17.10.1929ந் தேதி சுப்ரமணிய செட்டியார் என்பவருக்கு வேலாயுத

பத்தர் கிரயம் கொடுத்துவிட்டார் என்ற வாதத்தை பொறுத்து 1 முதல் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் பெரியதந்தை கிரயம் வாங்கிய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆகவும், வாதியின் பெரியதந்தை, வேலாயுத பத்தருக்கு கிரயம் கொடுத்த கிரையபத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(v) வேலாயுத பத்தர் மேற்படி சொத்துகளை 17.10.1929 அன்று சுப்பிரமணிய செட்டியார் என்பவருக்கு கிரயம் கொடுத்தள்ளார். அந்த கிரயப் பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சுப்பிரமணிய செட்டியார் இறந்த பிறகு அவரின் வாரிசான அவர் மனைவி ராஜாம்மாள் அவருக்காகவும் அவரின் மைனர் மகன் பழனிசாமிக்கு கார்டியனாகவும் இருந்து 18.02.1936ந் தேதி மேற்படி சொத்தை சின்னசாமி செட்டியார் என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார். அந்த கிரயப் பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்களை சின்னசாமி செட்டியாரின் ஒரே வாரிசான அவர் மனைவி தையல்நாயகி கடந்த 17.04.1967ந் தேதி கோவிந்தசாமி செட்டியார் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதிக்கொடுத்துள்ளார். அந்த உயில் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(vi) உயில் மூலம் மேற்படி சொத்துக்களை பெற்ற கோவிந்தசாமி செட்டியார் இறந்த பிறகு அவரின் வாரிசுகளான கோதண்டபாணியும், 1ம் பிரதிவாதி சிங்காரவேலுவும் அடைந்து அனுபவித்து வந்து மேற்படி சொத்துக்களை பொறுத்து 18.05.2012ந் தேதி 1ம் பிரதிவாதி சிங்காரவேலுவும், கோதண்டபாணியும் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் தாவா சொத்து 1ம் பிரதிவாதி சிங்காரவேல் பாகத்திற்கு B ஷெட்யூல் சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பத்திரம் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பிரிவினைபடி 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கப்பட்ட தாவா சொத்தை 1ம் பிரதிவாதி கடந்த 06.11.2013 அன்று 3ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார். அந்த கிரயப் பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் சர்வே எண்.584/9–க்கான கணிணி பட்டா 3ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. அந்த கணிணி பட்டா பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(vii) வாதி தரப்பில் தாவா சொத்து வாதியின் பெரியப்பா கிரயம் வாங்கிய சொத்து என்றும், அவர் அந்த சொத்தை யாருக்கும் கிரயம் செய்து கொடுக்கவில்லை என்றும், வாரிசு அடிப்படையில் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் வாதம் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் பெரியதந்தை முத்துகுமாரசாமி கிரயம் பெற்ற சொத்தை வேலாயுத பத்தருக்கு

கடந்த 15.08.1929 ல் கிரயம் செய்து கொடுத்துவிட்டதாகவும், தாவா சொத்து வாதிக்கு உரிமையானது இல்லை என்றும் வாதம் செய்யப்பட்டுள்ளது.

(viii) வாதியின் பெரியதந்தை குமாரசாமி பத்தர், செல்லம்மாளிடம் கிரையம் பெற்ற கிரயப் பத்திரமான வா.சா.ஆ.2 ஐ பரிசீலனை செய்ததில், மேற்படி கிரய பத்திரத்தில் ***மேற்படி ஊரில் இருக்கும் நடராஜ பத்தருக்கு நானும் எனது மாமனார் சாபாபதி பத்தரும் மேற்படி வீட்டின் பெயரில் எழுதிக்கொடுத்திருக்கும் ஈட்டுக்கடன் பத்திரத்தின் அசல், வட்டி கூடுதல் ஆகிய ரூ.250/- யை தாங்களே கொடுத்து பைசல் செய்து கொள்வதாக ஒப்புக்கொண்ட வகையில் தொகை ரூ.250/- என்று குறிப்பிட்டு*** எழுதப்பட்டுள்ளது. அதன்படி வா.சா.ஆ.2 ல் உள்ள வீட்டை கிரயம் வாங்கும்போது அந்த வீட்டின் பெயரில் நடராஜ பத்தருக்கு ஈட்டு கடன் பத்திரத்தை செல்லத்தம்மாளும் அவருடைய மாமனாரும் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்று தெரிய வருகிறது.

(ix) வாதியின் பெரியதந்தை, வேலாயுத பத்தருக்கு எழுதிக்கொடுத்த கிரயப் பத்திரமான பி.வா.சா.ஆ.2 ஐ பரிசீலனை செய்ததில் மேற்படி பி.வா.சா.ஆ.2 ல் வாதியின் பெரியதந்தை குமாரசாமி பத்தர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார், ***நான் அடியில் கண்ட வீட்டை துரைசாமி பத்தர் மனைவி செல்லம்மாள்***

*வகையறாவால் கிரயம் பெற்றபோது தங்களின் தகப்பன் பெயருக்கு இந்த வீட்டை மேற்படியார்கள் ஈடுகடன் எழுதி கொடுத்திருக்கிற ஈட்டுகடனை நானே பைசல் செய்து கொள்வதாக ஒப்புக்கொண்டபடி நான் பைசல் செய்யாமல் நாளது தேதியில் மேற்படி ஈட்டுகடன் பத்திரத்தின் படி அசல், வட்டியுடன் பாக்கி மேல் தொகை ரூ.364/- தாங்களே பைசல் செய்து கொள்வதாக ஒப்புக்கொண்டபடி என்பற்றாகி விட்டபடியாலும் என் குடும்ப செலவுக்காக நாளது தேதியில் ரொக்கமாக பெற்றுக்கொண்ட ரூ.136/-ம் ஆக இனம் இரண்டை நான் பெற்றுக்கொண்டது ரூ.500/- பற்றாகி விட்டப்படியால் அடியில் கண்ட வீட்டை தாங்களே நாளது முதல் அனுபவித்துக் கொள்ளவேண்டும்* என்று எழுதப்பட்டுள்ளது. அதன்படி வாதியின் பெரியதந்தை கடந்த 26.12.1924 ல் கிரயம் பெற்ற சொத்தை தான் வேலாயுத பத்தருக்கு கடந்த 15.08.1929-ல் கிரயம் கொடுத்துள்ளார் என்பது பி.வா.சா.ஆ.2 ன் மூலம் நிரூபணமாகிறது.

**(x) மேற்படி வேலாயுத பத்தர் என்பவர் வா.சா.ஆ.2-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஈட்டுகடன் சம்மந்தப்பட்ட நடராஜ பத்தரின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. வா.சா.ஆ.2 ல் உள்ள ஈடுகடனை பைசல் செய்யாத காரணத்தால் வாதியின் பெரியதந்தை, தான் கிரையம் பெற்ற தாவா சொத்தை ஈடுகடன் கொடுத்த நடராஜ**

**பத்தரின் மகனான வேலாயுத பத்தருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்பது 1 முதல் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.**

(xi) வேலாயுத பத்தர் தாவா சொத்தை கடந்த 17.10.1929-ல் சுப்பிரமணிய செட்டியார் என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார். மேற்படி கிரயப் பத்திரமான பி.வா.சா.ஆ.3 ல் 15.08.1929-ல் சா.முத்துகுமார பத்தர் மற்றும் செல்லம்மாள் வகையறாவிடம் கிரயம் வாங்கிய சொத்துகளை கிரயம் கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சொத்தை சுப்பிரமணிய செட்டியாரின் மனைவி ராஜம்மாள் கடந்த 18.02.1936ஆம் தேதி சின்னசாமி செட்டியார் என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார். சின்னசாமி செட்டியாரின் மனைவி தையல்நாயகி மேற்படி சொத்தையும் இதர சொத்துக்களையும் உள்ளடக்கி கோவிந்தசாமி செட்டியார் என்பவருக்கு 17.04.1967-ல் உயில் எழுதி வைத்துள்ளார். மேற்படி கோவிந்தசாமியின் மகன்களான கோதண்டபாணியும், 1ம் பிரதிவாதியும் பாகம் பிரித்துக்கொண்டதில் தாவா சொத்துகள் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி 1ம் பிரதிவாதி பாகப்படி கிடைத்த தாவா சொத்தை 3ம் பிரதிவாதிக்கு கடந்த 06.11.2013-ல் கிரயம் கொடுத்துள்ளார். தற்போது தாவா சொத்தின் சர்வே எண்.584/9-ன் பட்டா 3ம் பிரதிவாதி பெயரில் உள்ளது.

(xii) வாதி தரப்பில் வாதியின் பெரியதந்தை, செல்லம்மாள் என்பவரிடம் இருந்து கிரயம் வாங்கிய சொத்தின் கிழமேல் 24 அடி, தென்வடல் 55 அடி என்று உள்ளது என்றும், ஆனால் வேலாயுதபத்தர் வாதியின் பெரியதந்தையிடமிருந்து கிரயம் பெற்ற கிரயப் பத்திரத்தில் கிழமேல் 23 அடி, தென்வடல் 58 அடி என்று உள்ளது என்றும், மேலும் வேலாயுத பத்தர் சுப்பிரமணிய செட்டியாருக்கு கிரயம் கொடுத்த 17.10.1929 பத்திரத்தில் கிழமேல் 31 1/2அடி, தென்வடல் 58 அடி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், கிழமேல் அளவு 24 அடிக்கு பதிலாக 31 1/2 அடி என்று கூடுதலாக எழுதப்பட்டுள்ளது என்றும் எனவே அந்த சொத்து தாவா சொத்து இல்லை என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

(xiii) வேலாயுத பத்தர் வாதியின் பெரியதந்தையிடமிருந்து கிரயம் வாங்கிய சொத்தின் அளவு கிழமேல் ஜாதியடி 23, தென்வடல் ஜாதியடி 58 ஆகும். மேற்படி வேலாயுத பத்தர் வாதியின் பெரியதந்தையிடமிருந்து கிரயம் பெற்ற அதே தேதியில், பரமசிவபத்தர் மற்றும் செல்லம்மாள் வகையறாவிடமிருந்து கிழமேல் 8 1/2அடி தென்வடல் 58 கிரயம் வாங்கியுள்ளார் அந்த சொத்தையும் சேர்த்துதான் வேலாயுத பத்தர், சுப்பிரமணிய செட்டியாருக்கு கிரையம் கொடுத்துள்ளார். அதன்படி கிழமேல் அளவு 23 + 8 1/2 = 31 1/2 அடி ஆக உள்ளது. அதன்படி தான் வேலாயுத பத்தர், சுப்பிரமணிய

செட்டியாருக்கு எழுதிக்கொடுத்த கிரயப் பத்திரத்தில் கிழமேல் ஜாதியடி 31 1/2, தென்வடடில் ஜாதியடி 58 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வாதி தரப்பில் பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.8 வரை ஆவணங்களில் உள்ள சொத்து தாவா சொத்து இல்லை என்ற வாதம் நிராகரிக்கப்படுகிறது.

(xiv) வாதி தரப்பில், தாவா சொத்தானது வாதியின் பெரியதந்தை கிரையம் பெற்ற சொத்து என்று குறிப்பிட்டு வாரிசு அடிப்படையில் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று வாதம் செய்யப்பட்டுள்ளது. வாதியின் பெரியதந்தை கடந்த 26.12.1924 ல் கிரையம் பெற்ற சொத்தை கடந்த 15.08.1929 அன்று வேலாயுத பத்தருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டதால் தாவா சொத்தில் வாதிக்கு உரிமையில்லை. வாதி வழக்குரையில் வாதியின் பெரியதந்தை கிரையம் வாங்கிய சொத்து எது என்பதையும், பூர்வீக சொத்து எது என்பதையும் தெளிவாக குறிப்பிட தவறிவிட்டார். எனவே தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. அவ்வாறே **வழக்கெழு வினா 1க்கு** தீர்வு காணப்படுகிறது.

**7) வழக்கெழுவினா 4 க்கான தீர்வு:-**

(i) 1 முதல் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்து தற்போது 3ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றும், 3ம்

பிரதிவாதி தரப்பில், தாவா சொத்து 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்ய வேண்டி எதிர்கோருரிமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தை சுப்பிரமணிய செட்டியார் கிரையம் பெற்று அதனடிப்படையில் சுப்பிரமணிய செட்டியாரின் மனைவி கடந்த 18.02.1936 அன்று சின்னசாமி செட்டியாருக்கு கிரையம் கொடுத்து மேற்படி சின்னசாமி செட்டியார் மனைவியான தையல்நாயகி தாவா சொத்தை கோவிந்தசாமி செட்டியாருக்கு உயில் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார். மேற்படி கோவிந்தசாமியின் செட்டியாரின் மகன்களான 1ம் பிரதிவாதியும், கோதண்டபாணி என்பவரும் கடந்த 18.05.2012 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி 06.11.2013 அன்று 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார். பி.வா.சா.ஆ.6 ஆன 18.05.2012 பாகபத்திரத்திலும், பி.வா.சா.ஆ.7 ஆன 06.11.2013 கிரைய பத்திரத்திலும், தாவா சொத்தின் புல எண்.584/9 ல் 100 ச.மீ என்றும், சர்வே எண்.584/10ல் 93 ச.மீ என்றும், தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிரைய பத்திரத்தின் அடிப்படையில் புல எண்.584/9 ல் 100 ச.மீ க்கான பட்டா 3ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. அந்த பட்டா பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களை உண்மையான உரிமையாளரிடமிருந்து 3ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார்.

அதன்படி தாவா சொத்து 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதும், 1 முதல் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

(ii) தாவா சொத்துக்களை வாதியின் பெரியதந்தை 3ம் பிரதிவாதியின் முன் கிரையத்தாரர்களிடம் கிரையம் கொடுத்துவிட்டதாலும், 3ம் பிரதிவாதி உண்மையான உரிமையாளரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளதாலும், தாவா சொத்தான எதிர்கோருரிமை சொத்து 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரம் 3ம் பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அவ்வாறே **வழக்கெழு வினா 4-க்கு** தீர்வு காணப்படுகிறது.

8) <u>**வழக்கெழுவினாக் 2 க்கான தீர்வு:-**</u>

தாவா சொத்தை பொருத்து வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு மறுக்கப்பட்டுள்ளதாலும், தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதில்லை என்று தீர்மானித்துள்ளதாலும் வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அவ்வாறே **வழக்கெழு வினா-2க்கு** தீர்வு காணப்படுகிறது.

**9) வழக்கெழுவினா -3 க்கான தீர்வு:-**

வாதி தரப்பில் 1ம் பிரதிவாதி குடும்பத்தில் ஏற்பட்ட 18.05.2012 தேதியிட்ட பாகப்பிரிவனை பத்திரமும், 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு கடந்த 06.11.2013 தேதி எழுதிக்கொடுத்த கிரைய பத்திரமும் செல்லாது என்று பரிகாரம் கோரப்பட்டுள்ளது. தாவா சொத்தானது சின்னசாமி செட்டியார் மனைவியான தையல்நாயகி என்பவர்மூலம் 1ம் பிரதிவாதியின் தந்தையான கோவிந்தசாமி செட்டியாருக்கு உயில் மூலம் பாத்தியப்பட்டுள்ளது. மேற்படி கோவிந்தசாமியின் செட்டியாரின் மகன்களான 1ம் பிரதிவாதியும், கோதண்டபாணி என்பவரும் கடந்த 18.05.2012 ல் பாகப்பிரிவினை செய்துகொண்டுள்ளார்கள். மேற்படி பாகப்பிரிவினை மூலம் கிடைத்த தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி 06.11.2013 அன்று 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார்.மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் மற்றும் கிரைய பத்திரம் செல்லக்கூடியதாகும். தாவா சொத்து வாதிக்கு உரிமையில்லாததால் 1ம் பிரதிவாதி குடும்பத்தில் ஏற்பட்ட 18.05.2012 தேதியிட்ட பாகப்பிரிவனை பத்திரமும் 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு கடந்த 06.11.2013 தேதி எழுதிக்கொடுத்த கிரைய பத்திரமும் செல்லாது என்று வாதி கோரிய பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கறிது. அவ்வாறே **வழக்கெழு வினா 3க்கு** தீர்வு காணப்படுகிறது.

10) <u>வழக்கெழுவினா -5 க்கான தீர்வு:-</u>

தாவா சொத்தான எதிர்கோருரிமையில் கண்டுள்ள சொத்து 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி சொத்தில் வாதி இடையூறு செய்ய உரிமையில்லை. தாவா சொத்தில் வாதி இடையூறு செய்வது சம்பந்தமான வாதிக்கு எதிராக 3ம் பிரதிவாதி, வட்டாட்சியரிடம் புகார் கொடுத்துள்ளார். மேலும் எதிர்கோருரிமையில் தாவா சொத்தில் வாதி கால்நடைகளை கட்டிக்கொண்டிருப்பதாகவும், அதை பிரதிவாதி அவிழ்த்துவிடுவதாவும், வீட்டினை பிரித்து வேலை செய்யவிடாமல் இடையூறு செய்வதாக குறிப்பிட்டுள்ளனர். தாவா சொத்து 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதால் தாவா சொத்தில் வாதி இடையூறு செய்வது சட்டத்திற்கு எதிரானதாகும். மேற்படி வாதியின் இடையூறை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தின் மூலம்தான் தடை செய்யமுடியும். எனவே 3ம் பிரதிவாதி, வாதிக்கு எதிராக கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் 3ம் பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அவ்வாறே **வழக்கெழு வினா-5க்கு** தீர்வு காணப்படுகிறது.

11) <u>வழக்கெழுவினா 6க்கான தீர்வு:-</u>

இந்த வழக்கில் வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் எதுவும் இல்லை. வழக்கின் செலவுத்தொகையை தரப்பினர்களே

ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறே **வழக்கெழு வினா-6க்கு** தீர்வு காணப்படுகிறது.

**11) முடிவாக**

| | |
|---|---|
| 1. | அசல் வழக்கு எண். 258/2020 தள்ளுபடி செய்யப்படுகிறது.<br><br>3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமை அனுமதிக்கப்படுகிறது.<br><br>எதிர்கோருரிமை சொத்து 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும்,<br><br>எதிர்கோருரிமை சொத்தில் 3ம் பிரதிவாதியின் அனுபவத்தில் வாதி இடையூறு செய்யக்கூடாது என்று வாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 2. | வழக்கின் செலவுத்தொகையை தரப்பினர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். |

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

PREMKUMAR

Special Judge No II
Digitally signed by PREMKUMAR
Location: Jayankondam
Date: 2026.08.14 17:57:14 +1000

சிறப்பு நீதிபதி எண்-2 (LAOP)
ஜெயங்கொண்டம்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:-</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | கலியபெருமாள் (வாதி) |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>:-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | - | வம்சாவழி பட்டியல் |
| வா.சா.ஆ.2 | 26.12.1924 | வாதியின் பெயரியப்பா முத்துகுமாரசாமி வாங்கிய கிரைய பத்திரத்தின் நகல் |
| வா.சா.ஆ.3 | 20.11.2019 | வில்லங்கசான்றிதழ் நகல் |
| வா.சா.ஆ.4 | 15.11.2019 | வில்லங்கசான்றிதழ் நகல் |
| வா.சா.ஆ.5 | 18.05.2012 | 1ம் பிரதிவாதிக்கும், அவரது சகோதரருக்கும் இடையே ஏற்பட்ட பாக அட்டவணை பதிவு சான்று நகல் |
| வா.சா.ஆ.6 | 06.11.2023 | 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த கிரைய பத்திரத்தின் நகல் |
| வா.சா.ஆ.7 | 28.11.2019 | காவல்துறை கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனு நகல் |
| வா.சா.ஆ.8 | 23.12.2023 | தாவா 2 வது அயிட்ட சொத்திற்கு வாதி பெயரில் உள்ள நத்தம் பட்டா நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u>**

பி.வா.சா.1 – பன்னீர்செல்வம் (2ம் பிரதிவாதி)

பி.வா.சா.2 – சையத் இஸ்மாயில்

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 26.12.1924 | வாதியின் பெரியதந்தை முத்துக்குமாரசாமி வாங்கிய கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 15.08.1929 | முத்துக்குமாரசாமி வேலாயுத பக்தருக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் அசல் |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.3 | 17.10.1929 | சுப்ரமணிய செட்டியார் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அசல் |
| பி.வா.சா.ஆ.4 | 18.02.1936 | சின்னசாமி செட்டியார் பெயரில் உள்ள கிரையபத்திரத்தின் அசல் |
| பி.வா.சா.ஆ.5 | 17.04.1967 | தையல்நாயகி, கோவிந்தசாமி என்பவருக்கு எழுதிவைத்த உயிலின் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.6 | 18.05.2012 | பாகபத்திரத்தின் அசல் |
| பி.வா.சா.ஆ.7 | 06.11.2013 | 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரையபத்திரத்தின் அசல் |
| பி.வா.சா.ஆ.8 | - | 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா |
| பி.வா.சா.ஆ.9 | 11.12.2023 | வருவாய் கோட்டாட்சிர் அவர்களிடம் கொடுத்த மனு நகல் |
| பி.வா.சா.ஆ.10 | 22.05.2023 | வட்டாட்சியர் அவர்களிடம் கொடுத்த மனு நகல் |
| பி.வா.சா.ஆ.11 | 22.05.2023 | கிராம நிர்வாக அதிகாரி அவர்களிடம் கொடுத்த மனு நகல் |
| பி.வா.சா.ஆ.12 | 08.12.2023 | முதலமைச்சர் தனிப்பிரிவு அவர்களுக்கு அனுப்பப்பட்ட மனு |
| பி.வா.சா.ஆ.13 | 15.03.2024 | மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் அனுப்பப்பட்ட கடிதம் |
| பி.வா.சா.ஆ.14 | 21.12.2023 | கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களால் அனுப்பப்பட்ட கடிதம் |
| பி.வா.சா.ஆ.15 | - | மின்கட்டண இரசீதுகள் |
| பி.வா.சா.ஆ.16 | - | வீட்டுவரி இரசீதுகள் |
| பி.வா.சா.ஆ.17 | - | குடிநீர் கட்டண இரசீதுகள் |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.18 | 11.07.2020 | ஆண்டிமடம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு |
| பி.வா.சா.ஆ.19 | 20.03.2023 | மாவட்ட காவல் கண்காளிப்பாளரிடம் கொடுத்த புகார் மனு |
| பி.வா.சா.ஆ.20 | 11.04.2002 | வாதி பெயரில் உள்ள கிரையபத்திரம் |
| பி.வா.சா.ஆ.21 | – | வில்லங்கசான்று நகல் |

PREMKUMAR
Special Judge No II
Digitally signed by PREMKUMAR
Location: Jayankondam
Date: 2026.08.14 17:57:00 +1000

சிறப்பு நீதிபதி எண்.2 (LAOP)
ஜெயங்கொண்டம்.